# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 5 ஹிஜ்ரி 1429 ரஜப் ஜூலை 2008

இலவசம்

# புனித ரமலான் வாழ்த்துக்கள்



# நாகூர் தர்கா மரபுடைமை வளாகம் விரைவில் திறப்பு விழா

நாகூர் தர்கா மரபுடைமை வளாகம் விரைவில் திறப்பு விழா காணவிருக்கிறது. அதிகாரபூர்வ திறப்பு விழா தேதியும் நிகழ்ச்சிகளும் முடிவு செய்யப்பட்டு முறையாக அறிவிக்கப்படும். 2007-ல் தொடங்கப்பட்ட மறுமேம்பாட்டுப் பணி நிறைவு பெற்று இருப்பது குறித்து செயற்குழுவினர் மகிழ்சியும் மனநிறைவும் தெரிவித்தனர்.

தேசிய சின்னமான நாகூர் தர்காவைப் புதுப்பிக்கும் சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்தின் திட்டம் 25.11.1998-ல் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. சமூக வளர்ச்சி மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சராக அப்போது பதவி வகித்த நாடாளுமன்ற நாயகர் அப்துல்லா தர்மூஜி அதனை அறிவித்தார்.

## வரலாறு

நாகூர் தர்காவின் வரலாறு நாம் அறிந்தது தான். சிங்கப்பூரில் குடியேறிய முஸ்லிம்கள் நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகரின் நினைவாக தர்காவைக் கட்டினார்கள்.

1827 அக்டோபர் முதல் தேதி வழங்கப்பட்ட குத்தகையின் கீழ் தர்கா உருவாக்கப்பட்டது. அன்றைய தமிழ் முஸ்லிம் பிரமுகர் காதர் பிள்ளை, பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பெனியிடமிருந்து குத்தகையைப் பெற்றார். அதற்குரிய ஆவணங்கள் உள்ளன. அதன்படி தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் வழங்கப்பட்ட இடத்தில் 1828-ஆம் ஆண்டுக்கும் 1830-க்கும் இடையில் நாகூர் தர்கா கட்டி முடிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் நாகூரில் அமைந்துள்ள தர்காவின் பாணியில், அதே தோற்றப் பொலிவுடன் இந்த தர்கா உருவாக்கப்பட்டது. அந்நாளில் தொழுகை இடமாகவும் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்கள் ஒன்று கூடும் இடமாகவும் தர்கா விளங்கி வந்தது.




சிங்கப்பூர் நாகூர் தர்கா 1974-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் தேதி தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. தேசிய வரலாற்றுச் சின்னங்களை நினைவுகூரும் முயற்சியாக வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகள் வரிசையில் நாகூர் தர்கா இடம் பெற்றது. 7.6.1984-ல் ஒரு வெள்ளி மதிப்புடைய தர்காவின் முகப்புத் தோற்றத்தைக் கொண்ட அஞ்சல் தலை விற்பனைக்கு வந்தது.

தர்காவின் நிர்வாகப் பொறுப்புகளை நீதி மன்ற ஆணையின்படி 2000 அக்டோபர் பதினெட்டாம் தேதி முயிஸ் ஏற்றுக்கொண்டது. இந்திய முஸ்லிம்களின் மரபுடைமை வளாகமாக - நிலையமாக (Nagore Dargah Heritage Centre) தர்கா மேம்படுத்தப்படும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

## மரபுடைமை வளாகம்

இந்திய முஸ்லிம்களின் வரலாற்றையும், கலாசாரத்தையும் சித்திரிக்கும் காட்சியகம், ஆய்வு மையம், நூலகம், நிகழ்ச்சி அரங்கு முதலானவை மரபுடைமை நிலையத்தில் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாகூர் தர்காவை 1.8 மில்லியன் (18 லட்சம்) வெள்ளி செலவில் மரபுடைமை வளாகமாக மேம்படுத்தும் திட்ட விவரங்களை பென்கூலன் பள்ளிவாசலில் 20.5.2005 வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் முயிஸ் தலைவர் ஹாஜி முஹம்மது அலமி மூசா முதல்முறையாக வெளியிட்டார்.

அந்தப்பணிக்கு நிதி திரட்டுவதற்காக

தொழிலதிபர் ஹாஜி அப்துல் ஜலீல் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. ஹாஜி ஷர்புதீன், ஹாஜி நசீர் கனி, ஹாஜி மசூது, ஹாஜி ஷேக் அலாவுதீன் ஆகியோர் இடம் பெற்றுள்ள குழு முனைப்புடன் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டதை முயிஸ் தலைவர் பாராட்டினார். அந்தத் திட்டத்திற்கு முயிஸ் மூன்று லட்ச வெள்ளியை அப்போது வழங்கியது.

இந்திய முஸ்லிம்கள் பாரம்பரியச் சிறப்புடையவர்கள். உழைப்பும் புரிந்துணர்வும் மிக்கவர்கள். அவர்களின் பலதுறைத் திறன் சமூகத்திற்கு சீரும் சிறப்பும் சேர்க்கக் கூடியது. அவர்களின் உழைப்புத் திறனுக்கு ஒரு சின்னம் இருப்பது அவசியம். அதற்கு அனைவரும் ஆதரவு நல்க வேண்டும் என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அப்போது குறிப்பிட்டார்.

## நிதி திரட்டும் விருந்து

தர்கா சீரமைப்புப் பணிக்கு நிதி திரட்ட 3.12.2006 அன்று இரவு சாங்கி எக்ஸ்போ அரங்கில் நடைபெற்ற அறப்பணி விருந்து நிகழ்ச்சி ஓர் இனிய வரலாற்றுப் பதிவு. மாண்புமிகு அதிபர் எஸ்.ஆர்.நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில், சுற்றுப்புற நீர்வள அமைச்சரும், இஸ்லாமிய விவகார அமைச்சருமான டாக்டர் யாகூப் இப்ராஹிம், மூத்த வெளியுறவுத் துணையமைச்சர் ஹாஜி ஜைனல் ஆபிதீன் ரஷீத், முயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூசா முதலானோர் பங்கேற்றனர்.

நாகூர் தர்கா மரபுடைமை வளாக நிதி திரட்டும் விருந்தில் இரண்டு லட்சம் வெள்ளி நிதி சேர்ந்தது முயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூசா அதிகாரபூர்வமாக அதை அறிவித்தார்.

அதையடுத்து மினி என்வைரன்மெண்ட் சர்வீசஸ் நிறுவனம் தனிப்பட்ட முறையில் ஒரு லட்சம் வெள்ளியை வழங்கி நிதியை மூன்று லட்சமாக உயர்த்தியது. அந்தத் தொகைக்கான காசோலையை நிதி திரட்டும் குழுவின் தலைவருமான ஹாஜி ஜலீல் சிறப்பு விருந்தினர் அதிபர் எஸ்.ஆர்.நாதனிடம் வழங்கினார்.

நிதி திரட்டும் திட்டத்தை முயிஸ் 2005ல் அறிவித்தபோதே 18 ஆயிரம் வெள்ளியை ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் பிபிஎம் அடையாள நன்கொடையாக வழங்கியது குறிப்பிடத்தக்கது. மாடர்ன் மாண்டிசோரி கல்வி நிலைய இயக்குநர் திரு. டி.சந்துரு 10,000 வெள்ளி நன்கொடை வழங்கினார்.

நாகூர் தர்கா மரபுடைமை வளாக மேம்பாட்டுப் பணிக்கு உதவிக்கரம் நீட்டி ஒத்துழைப்பு நல்கிய அனைவர்க்கும் குழுவின் தலைவர் ஹாஜி ஜலீல் அவர்களும் உறுப்பினர்களும் நாடியின் மூலம் நன்றி பாராட்டினர். "இந்த நல்ல பணி நிறைவேற மனமுவந்து உதவி செய்த நல்ல உள்ளங்களை நன்றிப் பெருக்குடன் நினைத்துப் பார்க்கிறேன். அவர்களின் நலமான வாழ்வுக்கு இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொள்கிறேன்" என்று ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் நன்றி பாராட்டியுள்ளார்.

## இலக்கு

சிங்கப்பூரில் இஸ்லாமிய மரபுடைமை மற்றும் நாகரிகத்தைப் பாதுகாக்கும் சமுதாய முயற்சியைப் பளிச்சிடுவதாகவும், பயன்மிகு காட்சியரங்கமாகவும் நாகூர் தர்கா மரபுடைமை வளாகம் திகழும். சிங்கப்பூரின் பல சமய நல்லிணக்கம், பல இனப் புரிந்துணர்வை வளர்க்கும் பயணம் மற்றும் ஆய்வுப் பணி அரங்கமாகவும் இவ்வளாகம் விளங்கும். அன்று தொட்டு இன்று வரையிலான இந்திய முஸ்லிம் முன்னோடிகள், வணிகச் செம்மல்கள், அறக் கொடையாளர்கள், தலைவர்களின் சிறப்புமிகு வரலாற்றையும் கலாசாரத்தையும் எடுத்துரைக்கும் காட்சிக் கூடமாகவும் நாகூர் தர்கா மரபுடைமை வளாகம் விளங்கும்.



# ஹிஜ்ரி 1429 முஹர்ரம் சிறப்பு

முஹர்ரம் நம்மைவிட்டுச் சென்றாலும், அந்த இனிய நினைவுகளும் மகத்துவமும் மறையவில்லை. நெஞ்சில் நிலைத்து நிற்கும் அந்த இனிய மாதம் மிகவும் புனிதமானது. முஹர்ரம் வழங்கும் செய்திகளும் சிந்தனைகளும் விரிவானவை. ஆழ அகலமான எண்ணக் கருவூலங்கள் அவை.

ஹிஜ்ரி ஆண்டு வரலாற்றுச் சிறப்பும் மரபும் வாய்ந்தது. பிறைக் கணக்கு ஆண்டான ஹிஜ்ரிக்கும் தமிழ், ஆங்கிலேய, சீன ஆண்டுகளுக்கும் நாள் எண்ணிக்கையில் சில வித்தியாசங்கள் உள்ளதை அறிவோம். ஹிஜ்ரி ஆண்டை எந்த அடிப்படையில் தொடங்குவது என்ற விவாதம் நபித் தோழர்களிடையே நடைபெற்றது. நபிகள் நாயகம் பிறந்த ஆண்டிலிருந்து கணக்கிடலாம் என்று சிலர் கூறினர். அண்ணலார் நபிப்பட்டம் பெற்ற நாளைக் கொண்டு தொடங்கலாம் என்று வேறு சிலர் தெரிவித்தனர். அவர்கள் மறைந்த தினத்தை வைத்துக் கணக்கிடலாம் என்ற கருத்தும் அப்போது தெரிவிக்கப்பட்டது. மற்ற சம்பவங்களின் பின்னணியில் இஸ்லாமிய ஆண்டைத் தொடங்கவும் யோசனை தெரிவிக்கப்பட்டது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஹிஜ்ரி நாயகர். உலகறிந்த வரலாறு. ஹிஜ்ரத் என்ற சொல் அர்த்தச் செறிவு மிக்கது. இறைவனின் கட்டளையை ஏற்று நபிமணி அவர்கள் பிறந்த மண்ணான திரு மக்காவை விட்டு மதினாவுக்குச் சென்ற வரலாறு தியாகக் காவியம். ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணப்படுவதை குறிக்கும் அரபு மொழிச் சொல்லே ஹிஜ்ரத். எனவே, பெருமானார் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் - இடப் பெயர்ச்சி செய்த காலக் கணக்கின் அடிப்படையில் ஹிஜ்ரி ஆண்டை அமைக்க உடன்பாடு காணப்பட்டது. அந்த ஆண்டு தொடங்கிய நாள் ஈசவி - கி.பி. 662 ஜுன் 28 திங்கட்கிழமை என்பது வரலாற்றுப் பதிவு. இஸ்லாமிய ஆண்டுக்கு ஹிஜ்ரி எனப் பெயர் சூட்டியவர் கலீபா உமர் (ரலி) அவர்கள்.

முஹர்ரம் தொடங்கி ஸஃபர், ரபியுல் அவ்வல், ரபியுல் ஆகிர், ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆகிர், ரஜப், ஷஃபான், ரமலான், ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ் முடிய பன்னிரண்டு மாதங்களுக்கும் சமூக, மார்க்க, கலாசார வரலாற்றுச் சிறப்புகள் உண்டு.

முதல் மாதமான அவ்வல் முஹர்ரம் அரிய சிறப்புகளைக் கொண்டது. முஹர்ரம் என்ற சொல் அர்த்தம் மிக்கது. 'விலக்கப்பட்டது' என்பது அதன் பொருள். தீயவற்றை, வேண்டாதவற்றை, தடுக்கப் பட்டவைகளை விலக்கிவைப்பது, அவற்றிலிருந்து. விலகியிருப்பது புனிதமான கடமை. பொறாமை, போர், பூசல் முதலான தீமைகளிலிருந்து அனைவரும் விலகியிருக்க வேண்டும். அதுவே முஹர்ரம் வழங்கும் முக்கிய செய்தி. அதனால் அமைதி தரும் மாதமாக முஹர்ரத்தை அரபு மக்கள் மதித்தனர்; புண்ணியம் மிக்க புனித மாதமாகப் போற்றி போர்வாளை உறையிலிட்டு மூடினர் என்பது வரலாறு.

## ஆஷுரா

அஷ்ரா என்ற அரபு மொழிச் சொல் பத்தாம் எண்ணைக் குறிக்கும். முஹர்ரம் பத்தாம் நாளான ஆஷுரா பாரம்பரியச் சிறப்புடையது. ஆதம் நபி முதல் அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள் வரை இறைதூதர் அனைவரின் வாழ்விலும் ஆஷுரா தினம் தொடர்புடையது என்பதை வரலாறு உணர்த்துகிறது. எனவே, ஹிஜ்ரி ஆண்டு தொடங்குவதற்கு முன்பிருந்தே ஆஷுரா தினம் அனுசரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆதி தூதர் ஆதம், இத்ரிஸ் நபி, யூனூஸ் நபி, தாவூது நபி, சுலைமான் நபி, இப்ராஹிம் நபி ஆகியோருக்கு ஆஷுரா நாளில் ஏற்பட்ட அனுபவங்களை சரித்திரம் எடுத்துரைக்கிறது.

ஆதம் (அலை) அவர்களின் பாவமன்னிப்பை இறைவன் ஏற்று நெறிப்படுத்திய நாள் அதுவேயாகும். நூஹ் (அலை) தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஏகத்துவத்தை எடுத்துரைத்தும் செவிசாய்க்காத சமூகத்தை கடல் பிரளயத்தில் மூழ்கடித்து விசுவாசிகளை இறைவன் காத்த நாளும் அது தான்.

யூனூஸ்(அலை) அவர்களின் குற்றம்

குறைகளை அல்லாஹ் மன்னித்து, மீனின் வயிற்றிலிருந்து விடுவித்த நாள் ஆஷூராவேயாகும். இப்ராஹீம் நபியின் பிறந்த நாளும் நெருப்புக் குண்டத்திலிருந்து அவர்கள் வெளியேறிய தினமும் அது தான்.

மூஸா நபி கொடுங்கோலன் பிர்அவுனின் கோரப் பிடியில் சிக்காமல் கரையைக் கடந்த நாள் ஆஷூராவே ஆகும். நபிமணி அவர்களின் பேரர் இமாம் ஹுஸைன் அவர்கள் கர்பலா களத்தில் இன்னுயிரை நீத்ததும் ஆஷூரா - முஹர்ரம் பத்தாம் நாளில் தான்.

ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்கும் வழக்கம் இருந்து வருகிறது. தான தர்மங்கள் செய்ய வேண்டும். உபரி வணக்க வழிபாடுகளைச் செய்ய வேண்டும். மார்க்க அறிஞர்களை, பெரியவர்களைச் சந்தித்து அன்பையும் நல்லாசியையும் பெற உகந்த நாளாக ஆஷூரா கருதப்பட்டு வருகிறது.

ஆஷூரா தினத்தில் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர் சுற்றம் சொந்த பந்தத்தினருக்கும் தாராளமாகச் செலவு செய்தால் அதற்குரிய பலனை அல்லாஹ் அருள்வான் என்று நபிகள் திலகம் கூறியுள்ளார்கள்.

## ஜனநாயக நினைவு நாள்

முஹர்ரம் பத்தாம் நாள் கர்பலா நாள் என அழைக்கப்பட்டு வருவதை அறிவோம். இஸ்லாம் புத்துயிர் பெறுகிறது - ஒவ்வொரு கர்பலா சம்பவத்திற்குப் பிறகுதான். மகாகவி அல்லாமா இக்பால் அவர்கள் கவிதை வழங்கியிருப்பதை மறக்க முடியுமா?

ஜனநாயகத்திற்கு வழிவகுத்த அந்த நிகழ்வை இந்நாளில் நினைவு கூரலாம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பிறகு நான்கு கலீபாக்கள் ஆட்சி புரிந்தார்கள். அவர்களை அடுத்து நபித் தோழர்களில் ஒருவரான முஆவியா ஆட்சிக்கு வந்தார். அவர் காலமான பிறகு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் ஆட்சிக்கு வர வேண்டும். ஆனால், அதற்கு மாறாக ஹஜ்ரத் முஆவியாவின் மகன் யஜீத், தானே கலீபா - ஜனாதிபதி என அறிவித்துக் கொண்டார். அலி (ரலி) அவர்களின் புதல்வரான நபிகள் திலகத்தின் பேரர் ஹுஸைன் (ரலி) யஜீதுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினார்கள். கர்பலா களத்தில் நிகழ்ந்த போரில் ஹுஸைன் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டு ஷஹீத் ஆனார்கள். அந்த உயிர்த் தியாகம் ஜனநாயகத்திற்கு களம் அமைத்தது. ஈராக்கியத் தலைநகர் பாக்தாதுக்கு அருகில் அமைந்த ஒரு மைதானமே கர்பலா.

எண்ணற்ற நினைவுகளைத் தாங்கி வரும் புனித மாதம் முஹர்ரம். மக்கள் அனைவரும் அமைதியும் மகிழ்ச்சியும் வளப்பமும் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும். போரும் பூசலும் மறைய வேண்டும். புத்துணர்வு மலர்ந்து செழிக்க வேண்டும். முஹர்ரம் வழங்கும் செய்தி இது தான். - ஜாவித்





*தாருல் குஃப்ரான் பள்ளிவாசலில் நடைபெற்ற முஹர்ரம் சிறப்பு நிகழ்ச்சி*

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்



“Singapore Mosques Challenge Trophy 2007” soccer competition at Jalan Damai on 31 Dec 2007



Minister sending off pilgrims at Changi Airport on 9 Dec 2007



Commencement of Abdul Razak Mosque project on 15 Feb 2008



Model of Abdul Razak Mosque



HE Mr Albert Chua, High Commissioner Designate to Canberra visit to Harmony Centre on 27 Feb 2008



Religious home tuition at Blk 832, Woodland Street 32 on 17 Feb 2008



aL.I.V.E. administrators meeting at An-Nahdhah Mosque on 1 Feb 2008



aL.I.V.E. adventure camp at Al-Iman mosque on 22 Dec 2007

# சமூக ஒருங்கிணைப்புச் சேவையில் பள்ளிவாசல்களின் முன்னணிப் பங்கு



சிங்கப்பூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம்களின் ஐக்கியத்திற்கும் ஒருங்கிணைப்புக்கும் பாலமாக, பயன்மிக்க களமாகப் பங்காற்றி வருகின்றன.

அதற்கேற்ப பள்ளிவாசல்களின் செயலாக்க முறைகள் மறுசீரமைப்பப்பட்டு நல்ல பலன் கிடைத்து வருகிறது.

ஒன்றுகூடல் நிகழ்ச்சியின் போது அந்த சிந்தனையை, செயலாக்கத்தைப் பகிர்ந்து கொண்டார் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹீம்.

கடந்த அக்டோபர் 26 அன்று இஸ்தானாவில் நடைபெற்ற அந்நிகழ்ச்சியில், பள்ளிவாசல் சேவை குறித்த பயனுள்ள தகவல்களை அமைச்சர் வெளியிட்டார்.

ஐந்து நேரத் தொழுகையுடன் குடும்பங்களுக்கான பல நிகழ்ச்சிகள் எல்லா பள்ளிவாசல்களிலும் இடம் பெற்று வருகின்றன. அவற்றில் கலந்து கொள்ளும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளில் பெற்ற அனுபவத்தை மற்றோர்க்கு அவர்கள் எடுத்துரைக்கும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

பள்ளிவாசல்களில் சமூகத் தலைவர்கள் நடத்திவரும் கருத்தரங்குகளின் பயன்களையும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். 16 அமைப்புகள் ஒன்று சேர்ந்து கல்விக் கருத்தரங்குகள், இளையர் நடவடிக்கைகள் மற்றும் மணமாகாத பெண்களுக்குரிய ஆலோசனை சேவை ஆகியவற்றைக் கூட்டாக நடத்தி வருகின்றன. பள்ளிவாசல்களில் நடைபெறும் ஆக்ககரமான இந்த நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பலரும் கலந்து கொள்கின்றன; பயனடைகின்றனர்.

இது மனநிறைவு தருவதாக டாக்டர் யாகூப் இபுராஹிம் தெரிவித்தார். மதரஸாக்களின் ஒருங்கிணைப்புத் திட்டம் மற்றொரு சிறப்பு அம்சம். குடியரசில் உள்ள ஆறு முக்கிய மதரஸாக்களில் மூன்று அவற்றின் கல்வித் திட்டங்களை ஒருங்கிணைத்துள்ளன. மதரஸா அல்ஜுனிட், மதரஸா அல் அரபியா ஆகியவை 2009 முதல் உயர்நிலைக் கல்வியை வழங்கும். அல் இர்ஷாத் மதரஸா தொடக்க நிலைக் கல்வியைக் கற்பிக்கும். மற்ற மூன்று மதரஸாக்களும் தொடக்க நிலை மற்றும் உயல்நிலைக் கல்வியைத் தொடர்ந்து வழங்கிவரும்.

கல்வித் திட்டங்களை இணைத்துள்ள மூன்று மதரஸாக்களுக்கு முயிஸ் நிதி திரட்ட உதவும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.



அல் ஹைர் இஸ்லாமியப் பிள்ளை வளர்ப்புப் பகுதி


# சிலு சிலு குளிரிலிருந்து சிவாஜிவரை

‘சிலுவென குளிரடிக்கிது அடிக்கிது. சிறு அரும்புகள் மலர் வெடிக்கிது. வனம்வந்து மரங்கொத்தி மனம்விட்டுச் சிரிக்கின்றதே...’ இப்படி படுவேகமாகப் பாட்டை ஆரம்பித்துப் பின்னர் ‘மலையாளக் கரையோரம் தமிழ்ப் பாடும் குருவி...’ என்று இதமாகக் கொண்டுவருவார் பின்னணிப் பாடகர் மனோ. இப்பாடல் நான் பதின்மூன்று வயதாக இருந்தபோது, ரஜினிகாந்தின் ‘ராஜாதி ராஜா’வில் மிகப் பிரபலமாக இருந்தது. பாட்டில் உலகமகா தத்துவம் எதுவுமில்லை என்பது அப்பவும் சரி, இப்பவும் சரியே. ஆனால் பாடல்வரிகளோ என் மனதில் நிலைத்திருக்கின்றன. சிறுவர், இளையர் மனதில் எவ்வளவு ஆழமாகப் பொழுதுபோக்குத் திரையம்சங்கள் பதியக் கூடும் என்று நிச்சயம் இந்த உதாரணம் உணர்த்தும்.

ஆனால் தற்போதைய தமிழ்ப் படங்களில் வரும் வசனங்களும் பாடல்வரிகளும் இயற்கையின் சிலுசிலு குளிராக இல்லாமல் அதிர்ச்சியில் உறைய வைக்கும் பனிக்கட்டிகளாக உள்ளன. இந்தத் திரைப்படப் பனிப்புயலுடன் தற்கால இளையரின் மிதமிஞ்சிய தகவல்சாதன ஈடுபாடும் (தொலைக்காட்சி, கணினி, கைத்தொலைபேசி, mp3 இசைக்கருவி) சேரும்பொழுது, நிச்சயம் அது சமூகத்துக்குப் பல சவால்களை ஏற்படுத்துகிறது.

திரைப்படத்துறை நிச்சயம் மூடப்போவதில்லை. அதே சமயம், அதன் தொடர் வெற்றியை ஆதரிப்பது இஸ்லாத்தின் கடமையுமில்லை. “நமிதா, மும்தாஜ் ஆடுகிறார்கள், அப்பாஸ், ஷ்யாம் நடிக்கிறார்கள், பாசில், அமீர் இயக்குகிறார்கள். ஏன், ரஹ்மான் இசைப்புயலாய் வேகம் குறையாமல் அடிக்கிறார் - இவர்களெல்லாம் முஸ்லீம்கள்தானே. இவர்களுக்காகப் பார்ப்போம். ஆதரவு கொடுப்போம்” என்று இளகிய மனம்படைத்த இல்லத்தரசிகள் வாதிடுவதில் அர்த்தமில்லை. மேலும், அவரவர் ஏன் சினிமாத்துறைக்கு வந்தார், அவர்தம் சூழ்நிலை, மனப்போக்கு இவையெல்லாம் நமக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

மொத்தத்தில், இனிமேல் தமிழ்ப்படமே பார்க்க வேண்டாமென்றுச் சொன்னால், அது தற்கால இளையருக்குச் சாத்தியமுமில்லை. கடந்த இரண்டு, மூன்று மணிநேரமாக என்ன பார்த்தோம், இதன் கருத்தென்ன, இது நம் வாழ்க்கைக்கு எப்படிப் பொருந்தும் என்று அவ்வப்போது யோசித்துப் பார்த்தால், நமக்கே அதிர்ச்சியாக இருக்கும். இது நிச்சயமாகப் பொழுதுபோக்குக்கே, இதனால் நமக்கோ நம் பிள்ளைகளுக்கோ பாதகம் வரச் சற்றும் வாய்ப்பிலலை என்று நம்மில் எத்தனை பேர் சொல்ல முடியும்? அந்த அளவுக்கு உஷார் நிலையில், பரீட்சை எழுதும் அளவுக்கு அறிவு விழித்திருந்தா படம் பார்க்கிறோம்? அப்போதுதானே அந்நியனும் சிவாஜியும் சாத்தியமாக முடிகிறது? போதாததற்கு, படம் முடிந்துத் தரையிறங்கும்போது, “ச்சே, மீண்டும் வேலையையும் வீட்டுப் பாடத்தையும் தொட வேண்டுமா?” என்ற அலுப்பும் ஏற்படலாம் பலருக்கு. அந்த அளவுக்கு வேற்றுலகக் கனவுத் தொழிற்சாலையில் இருந்திருப்போம், கடந்த மூன்று மணிநேரமாக.




தமிழ்ப் படத்தில் ஓரளவு நல்லது இருக்கிறது என்று சிலர் வாதிட்டாலும், நிச்சயமாக நல்லது அல்லாதது தான் அதிகமாக உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதோடு, இரண்டாம் வகையறாவின் சிற்றின்ப வியாபார ஆதிக்கம் ஓயப்போவதாகத் தெரியவில்லை. திரைப்படத் தயாரிப்பாளர்கள் சொல்வார்கள் இளையர்கள் இதைத்தான் விரும்புகின்றனர் என்று. பொதுமக்கள் சொல்வார்கள் இதைத்தானே காட்டுகின்றனர், வேறு எதைப் பார்ப்பது என்று. இந்தச் சுழல் விவாதத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும், ஆர்வத்தைச் சரியான பக்கம் செலுத்தி படிப்படியாகப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

‘8 Days’, ‘மூவி நியூஸ்’, படித்துப் போரடித்துப் போனால், லேசாகக் ‘குர்ஆனின் குரல்’, ‘நாடி’, போன்ற சஞ்சிகைகளைப் புரட்டப் பார்க்கலாம். இணையத்தில் raaga, tamiltube தளங்களில் “சிவாஜி”யைக் கேட்டு, பார்த்துத் திகட்டிப் போனால், கடும்குளிரில் எப்படி சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகளில் வெள்ளைக்கார முஸ்லீம்கள் நோன்பு வைக்கிறார்கள் என்று google செய்து, அறிந்து, மெய்சிலிர்க்கலாம். அந்த mp3 playerரில் ஓரிரண்டு பழைய ஹனீஃபா இஸ்லாமியப் பாடல்களைப் புகுத்தலாம். சிவாஜியின் ரஹ்மானுக்குச் சற்று ஓய்வு கொடுத்தால், பெரியவர் ஹனீஃபாவுக்கு playlistட்டில் ஒரு வாய்ப்புக் கிடைக்கும். “யா ரஹ்மானே” என்று கம்பீரமாக முழங்குவார். நம் காதில் மாட்டியுள்ள Ipodட்டில் என்ன பாடுகிறது என்று யார் சோதிக்கப் போகிறார்கள்? மார்க்கமானவற்றை ஜாலியாகக் கேட்கலாமே? இஸ்லாமியப் பாட்டைக் கேட்டுக் கொண்டு, ஜீன்ஸ் பாக்கெட்டில் கைகளைத் திணித்துக் கொண்டு, முகத்தைக் கூலாக வைத்துக் கொண்டு, ஸ்டைலாக சாலையில நடக்க முடியாதா, என்ன? நாளடைவில் ஜீன்ஸ் ஜிப்பாவாக மாறலாம், Ipodட்டின் மொத்த playlistட்டில் அல்குர்ஆனின் முப்பது அத்தியாயங்களும் அடங்கலாம். அப்போது அது நிச்சயம் “கலக்குத உன் ஸ்டைல், இழுக்குது உன் ஸ்டைல்...” தானே? Then you will get closer to The Real Boss!

# இஸ்லாமிய மார்க்கக் கல்விமுறை

சிங்கப்பூரிலுள்ள எல்லா பள்ளிவாசல்களிலும் SIES எனும் இஸ்லாமியக் கல்விமுறை இடம் பெறவிருக்கிறது. பள்ளிவாசல் மதரஸா 2007 மாநாட்டில் (MMC 07) அதற்கு முடிவு செய்யப்பட்டது.

பள்ளிவாசல்கள் SIES கல்விமுறையை ஏற்று நடத்துவதுவதன் மூலம் மாறிவரும் நமது இளைய சமுதாயத்துக்கு இஸ்லாமியக் கல்வியைத் திறம்பட போதிக்க முடியும் என முயிஸ் தெரிவித்துள்ளது. நமது இளையர்களுடனான பிணைப்பில் பள்ளிவாசல்கள் முக்கிய பங்காற்றுவதால், எல்லா பள்ளிவாசல்களும் 2010-ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சம் SIES பாடத் திட்டத்தின் ஒரு பகுதியையாவது கற்பிக்கத் தொடங்குவது அவசியம்.

SIES பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதில், முக்கிய ஆலோசனை மற்றும் உள்ளடக்கப் பணிகளில் முயிஸ் சிறப்புப் பங்காற்றி வந்துள்ளது. அதிகமான ஆலோசனைக் கூட்டங்களை அது நடத்தியது. பயனுள்ள பல கருத்துகளையும் ஆலோசனைகளையும் திரட்டியது.

சமயக் கல்வி ஆலோசனைக் குழு (REAP) உறுப்பினர்களின் பரிந்துரையைத் தொடர்ந்து, பகுதி நேர இஸ்லாமியக் கல்விப் பிரிவின் மொத்த தேவைகளைக் கவனிக்கும் ஒரு முக்கிய முயற்சியாக 2004-ல் சிங்கப்பூர் இஸ்லாமியக் கல்வி முறை (SIES) அறிமுகப்படுத்தப்பட்டது.


SIES கல்வி முறை எல்லா வயதுப் பிரிவினருக்கும் உரிய புனிதமான, ஒட்டுமொத்த இஸ்லாமியக் கல்விமுறையாகும். SIES 2004-ல் 5-8 வயதினருக்கும், 13-16 வயதினருக்கும் முறையே சிறார் மற்றும் பதின்ம வயதினர் aL.I.V.E. முன்னோடிப் பாடத் திட்டங்களைத் தொடங்கியது. aL.I.V.E. எனும் பெயர், அன்றாடம் இஸ்லாமிய அறநெறிகளைக் கற்பது (Learning Islamic Values Everyday) என்பதன் சுருக்கமாகவும், இக் கல்வித் திட்டக் கொள்கையின் பிரதிபலிப்பாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. 2006-ல் இரண்டு புதிய திட்டங்களும் முன்னோட்டமாகத் தொடங்கப்பட்டன. அவை, சிறார்-Tweens (9-12 வயதினருக்கு) மற்றும் இளையர்-Youth (17-24 வயதினருக்கு) உரிய aL.I.V.E. நிகழ்ச்சிகள்.

## சீரமைப்பு

SIES முற்றிலும் புதிய கல்வி முறை அல்ல. நமது இளையர்களுக்கான அடிப்படை மார்க்கக் கல்வி, தற்போதுள்ள பள்ளிவாசல் மதரஸா முறைப்படி தொடர்ந்து வழங்கப்படும். எனினும், பாடத் திட்டம், போதனை முறை மற்றும் நடைமுறைகள் இளையர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் சீரமைக்கப்படும்.

நமது சமுதாயத்தின் எதிர்காலம் நம் இளையர்களையே சார்ந்துள்ளது. நாம் அவர்களுக்கு எப்படிக் கல்வி கற்பித்து உருவாக்கிவிடுகிறோம் என்பதைப் பொறுத்தே அடுத்த தலைமுறையை அவர்கள் வழி நடத்துவார்கள். எனவே, முஸ்லிம் இளையர்கள் முறையான இஸ்லாமிய போதனைகளையும் நெறிகளையும் கற்றுத் தேர்ச்சி பெறுவது அவசியம். இதற்காகவே நமது இளையர்களுக்கான இஸ்லாமியக் கல்வி மிகச் சிறந்த வடிவில் மேம்படுத்தப்படுகிறது. இது, இஸ்லாமியக் கல்விமுறையை வலுவாய்ந்ததாக நிலைபெறச் செய்யும். இளையர்களின் மொழித் திறனுக்கு ஏற்ப அவர்களின் தேவைகளை நிறைவேற்றும்.

பள்ளிவாசல் தலைவர்கள் 2005 பள்ளிவாசல் மாநாட்டில் ஏற்றுக் கொண்ட ஒரு முக்கிய பரிந்துரையின்படி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். சிங்கப்பூரிலுள்ள எல்லா பள்ளிவாசல்களும் SIES கல்வி முறையை அடிப்படைத் திட்டமாக 2010-ஆம் ஆண்டுக்குள் (முழுமையாக அல்லது ஒரு பகுதியை) செயல்படுத்த வேண்டும் என்பதே அந்தப் பரிந்துரை.




அந்தப் பரிந்துரை செயல் வடிவம்பெற பள்ளிவாசல் மதரஸா மாநாடு 2007 வகை செய்துள்ளது.

## திட்டங்கள்

மாணவர்களுக்கு ஒருங்கிணைப்பு, கோட்பாடு, பிணைப்பு மற்றும் அனுபவத் திறன் ரீதியான முறையில் கற்பிக்கப்படும். அதன் பயன்: புனித இஸ்லாமியக் கல்வித் திட்டமான இது, இஸ்லாமிய போதனைகளின் விளக்கமாக அமைந்து, இளையர்கள் ஏட்டுக் கல்விக்கு அப்பாற்பட்ட தங்கள் வாழ்க்கை முறையாக இஸ்லாம் மார்க்கத்தைக் கடைப்பிடிக்க ஊக்கப்படுத்தும்.

பள்ளிவாசல் மதரஸாக்கள் முழுமையான, ஒட்டு மொத்த இஸ்லாமியக் கல்வி முறையைப் பெறுகின்றன. அதில் பாடத்திட்டத் தொகுப்பு, (பாடங்கள் மற்றும் மூலங்கள்) ஆசிரியர் நியமனம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (ஆசிரியர்களுக்கான பயிற்சி முறை, தொழில் நெறி, நலனபிவிருத்தி திட்டம்) மேற்பார்வை, மதிப்பீடு, ஏழைகள் மற்றும் வசதி குறைந்த மக்களுக்கான நிதியுதவித் திட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

விரிவான இந்தப் பாட முறை, இஸ்லாமியக் கோட்பாடுகளையும் கல்வியையும் பள்ளிவாசல்கள், இல்லங்கள், இணையம் போன்ற வெவ்வேறு தளங்கள் மூலம் கற்பிப்பது மட்டும் அல்ல. மேலும் பல முறைகள் இடம் பெறுகின்றன. வாராந்திர பாடங்கள், விடுமுறைப் பாடங்கள், கல்வி முகாம்கள், கல்விப் பயணங்கள் மற்றும் போட்டிகள் ஆகியவை அவற்றில் அடங்கும்.

SIES பாடத்திட்டம் முறையான அடிப்படையில் அறிமுகப்படுத்தப்படும். நம் பிள்ளைகள் எவ்வித சிரமமும் இலலாமல் கல்வி பயில்வதை உறுதிப்படுத்தும் வகையில் கட்டம் கட்டமாகக் கற்பிக்கப்படும். தங்கு தடையில்லாமல் ஒருங்கிணைந்த முறையில் பாடங்களை நடத்துவதற்கு பள்ளிவாசல்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவசியமான வசதிகளும் உதவிகளும் வழங்கப்படும்.

இஸ்லாமிய மார்க்கக் கல்விமுறையை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் பள்ளிவாசல் மதரஸாக்களின் ஆசிரியர்கள்-உஸ்தாதுகள்-ஆற்றிவரும் முக்கிய பங்கையும் முயிஸ் பாராட்டுகிறது.

# சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சொந்த இல்லத்தைப் பெற்றது



சிங்கப்பூரில் பழம்பெரும் அமைப்புகளில் ஒன்றாகத் திகழும் சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சமீபத்தில் சொந்த இல்லம் ஒன்றைப் பெற்றுள்ளது.

பல்லாண்டுகளாக வாடகை இல்லத்தில் இயங்கி வந்த சங்கம் கடந்த மாதம் சொந்த இல்லத்திற்குக் குடி பெயர்ந்தது. புதிய இல்லத்தைச் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சின் மூத்தத் துணை அமைச்சர் இஞ்சே சைனுல் அபிதீன் ரஷீத் அவர்கள் அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார்கள்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் தனது உறுப்பினர்களின் நலன்களுக்காகப் பாடுபடுவதோடு நின்றுவிடாமல், இஸ்லாமிய சமயக் கோட்பாடு வளர்த்துப் பேணுவதிலும், தமிழுக்கு ஆக்கப்பூர்வமான பங்களிப்பதிலும் சிறந்து விளங்குவது தமக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பலவின சமுதாயத்தின் தேவையையும், எதிர்பார்ப்பையும் கவனத்தில் கொண்டு சங்கம் செயல்படுவது, சங்கம் சரியான பாதையில் மிடுக்குடன் செல்வதைக் காட்டுவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

இலவசப்பாட வகுப்புகள், உபகாரநிதி வழங்குதல், திருமணப் பயிற்சி வகுப்பு, இளையோர் முகாம், இலவசச் சட்ட ஆலோசனை, இலவச மருத்துவ ஆலோசனை போன்ற சேவைகளோடு சங்கம் ஜனாஸா சேவையையும் ஆலிம் பட்டக்கல்வியையும் நடத்தி வருகிறது.







சுமார் 3000 குடும்பங்களைக் கொண்டு சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், சிங்கப்பூரில் இயங்கி வருகின்ற சங்கங்களில் பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கம் எதிர்காலத்தில் தேசிய நீரோட்டத்தில் இணையத்தக்க அளவில் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த லீகின் தலைவர் ஹாஜி நஸீர் கனி, சங்கம் தற்சமயம் சிண்டா, மெண்டாக்கி, முயிஸ் போன்ற தேசிய நிறுவனங்களுடன் இணைந்து தேசிய நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

சொந்த இல்லத்தைப் பெற்றதன் மூலம், சங்கம் தனது சேவையை விரிவுபடுத்த உத்தேசிததிருப்பதாகக் குறிப்பிட்ட சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹாஜி மு.அ. மசூது



# தங்க முனை விருது பெற்றார் கவிஞர் ரஜீத்

சிங்கப்பூர் தேசியக் கலைமன்றம் ஈராண்டுக்கு ஒருமுறை நான்கு மொழிகளிலும் கவிதை, சிறுகதைப் போட்டிகளை நடத்தி தங்க முனை (Golden Point) விருதுகளை வழங்கி வருகிறது. 2007 விருதளிப்பு விழா முன்னைய நாடாளுமன்ற இல்லமான ஆர்ட் ஹவுஸ் அரங்கில் கடந்த டிசம்பர் ஐந்தாம் தேதி நடைபெற்றது. நாடாளுமன்ற நாயகர் அப்துல்லா தர்மூஜி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

தமிழ்க் கவிதைப் பிரிவில் முதல் பரிசை வென்று சமூகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார் கவிஞர் ரஜீத் அஹமது. பரிசுத் தொகை $10,000. முன்னாள் இயற்பியல் - Physics - பேராசிரியரான ரஜீத், MSc.,M.Phil., 1993-ல் கவிதை எழுதத் தொடங்கினார். சிங்கப்பூர் இதழ்களிலும் இலக்கியக் களங்களிலும் 1999 முதல் கவிதைகளை வழங்கிவருகிறார்.

"பார்வையே கவிதைப் படைப்புகளுக்குக் களமாக அமைகிறது. நம்மைச் சுற்றி நடப்பவற்றை, நிகழ்ச்சிகளை ஆழமான கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். பார்த்தவற்றை இலக்கியமாகப் பதிவு செய்ய வேண்டும். புதுமையாகக் கவிதையைப் படைக்க வேண்டும். கவிதையில் உரைநடையைக் கலக்கக் கூடாது. கவிதையில் வீச்சு இருக்க வேண்டும். இதுவே என் பார்வை. முன்னோடிக் கவிஞர்களின் படைப்புகளை வளரும் கவிஞர்கள் படித்து உத்திகளை உணர்ந்து கொள்ள வேண்டும். பாரதியார் கவிதைகள் நல்ல எடுத்துக்காட்டு." என்று கூறுகிறார் ரஜீத் அஹமது.



சங்கங்களும் சமூக, கலை, இலக்கிய அமைப்புகளும் கவிஞர்களையும், கதாசிரியர்களையும் உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் பரிசுகளை வெல்லும் இலக்கிய அணியை நாம் பெறலாம். பெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு எடுத்துக்காட்டாக, ஹென்டர்சன் சமூக மன்ற இந்திய நற்பணிக் குழு, தங்கமுனை விருதுபெற்ற கவிஞர்களுக்கும், சிறுகதை எழுத்தாளர்களுக்கும் 6.1.2008 அன்று பாராட்டு விழா நடத்தியதை அவர் சுட்டிக்காட்டினார். அந்த மன்றத்தின் இலக்கிய அணியில் பொறுப்பு வகிக்கிறார் கவிஞர் ரஜீத்.

"என் கவிதை, இலக்கியப் பணி தொடரும். இதுவரை எழுதிய கவிதைகளை தொகுத்து நூலாக்குவது அடுத்த இலக்கு. இலக்கிய விருது பெறும் எதிர்கால அணியை உருவாக்குவதிலும் அமைப்புகள் மூலம் ஆவன செய்வதும் என் இலக்கு" என்று நாடியிடம் தெரிவித்தார், தங்கமுனை விருதுக் கவிஞர் ரஜீத்.

---

அவர்கள், சங்கம் வசதி வாய்ப்பற்றவர்களின் நலனில் அதிக கவனம் செலுத்தும் என்று விளக்கினார்.

13-7-2008ஆம் நாளன்று நடைபெற்ற அதிகாரப்பூர்வ திறப்பு விழாவில் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சார்ந்த சமூகத் தலைவர்கள், சங்கப்பேராளர்கள், அடிமட்டத் தொண்டர்கள் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டனர்.

பலநூறு பேர் கலந்துகொண்ட திறப்பு விழாவில் மாதர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டது தமக்கு மனநெகிழ்வை உண்டாக்கியதாக சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஹாஜி ஷேக் மைதீன் நாடியிடம் குறிப்பிட்டார். மலேசியப் பேராளர் குழுவுக்கு பினாங்கு பெர்சத்துவான் நூரூல் இஸ்லாம் அமைப்பின் தலைவர் மு.ஷா. செய்யது சுல்த்தான் கலந்துகொண்டார்கள்.



# சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க நிகழ்ச்சிகள்

*கடந்த 12-7-2008,* சனிக்கிழமை மெக்பெர்ஸன் சாலிம் மத்தார் பள்ளியில் அல்மதரஸா நூரூல் இஸ்லாம் சார்பாக கிளை திறப்பு விழாவும், அம்மதரஸாவின் ஆசரியர், ஆசரியைகளுக்கு விருது அளிக்கும் விழாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது. சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் சங்க நிர்வாகத்தால் நடத்தப்படும் மதரஸா வகுப்புகளில் சாலிம் மத்தார் பகுதியையும் சேர்த்து மொத்தம் *7* இடங்களில் நடைபெற்று வருகிறது. அல்ஜுனிட் வட்டார மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு சனிக்கிழமை காலை *9.00* மணி முதல் *12.00* வரை மதரஸா வகுப்புகள் நடைபெறும். நமது சங்க உஸ்தாத் மௌலவி ஹாபிழ் N.A. மில்லத் இஸ்மாயில் ரியாஜி அவர்கள் மதரஸா வகுப்புகளை நடத்தித் தருவார்கள்.










சிங்கப்பூர் தென்காசி முஸ்லீம் சங்கமும், ஸ்டாம்போட் வர்த்தக் பள்ளியும் இணைந்து வசதி குறைந்தவர்களுக்கான உணவுப் பங்கிட்டை ஜூன் மாதம் *28*ஆம் நாளன்று கூட்டாக நடத்தின.

லெங்கொக் பாருவில் உள்ள சங்கத்தின் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தஞ்சோங் பகார் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பே யாம் கெங் சிறப்பு விருந்தினராக வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பித்தார்.

எல்லா இனங்களைச் சேர்ந்த சுமார் *300* வசதி குறைந்த குடும்பங்களுக்கு அரிசி மற்றும் இதர பொருட்களைக் சிறப்பு விருந்தினர் வழங்கினார். விலைவாசி உயர்ந்திருக்கும் வேளையில் இந்த உதவிப் பொருட்கள் கிடைத்து இருப்பது குறித்து தாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பதாக பலர் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். சுமார் *2* மணியளவில் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவு கண்டது.